**<u>வணிக வரித் துறை</u>**

அனுப்புநர்
திருமதி அ. பௌசியா பானு பி.காம்., எம்.ஏ.,
பொதுத் தகவல் அலுவலர்,
தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005,
இணை ஆணையர் (சட்டம்) (முகூபொ),
கூடுதல் தலைமைச் செயலர் /
வணிக வரி ஆணையர் அலுவலகம்,
சென்னை – 5.

பெறுநர்
அனைத்து பொதுத் தகவல் அலுவலர்கள்
மற்றும் முதல் மேல்முறையீட்டு அலுவலர்கள்
தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005,
வணிக வரித் துறை. (இணைப்புடன்)
(இணையத் தளம் மூலம்)

**<u>கடித எண் சட்டக்குழு 1/433/2018, நாள் 05 .01.2018</u>**

ஐயா,

**<u>பொருள்</u>** தமிழ்நாடு தகவல் ஆணையம் – வழக்கு எண். SA 3876/மா.த.த.ஆ/2017 நாள் 18.11.2017 குறிப்பாணையின் நகல் தகவலின் பொருட்டு அனுப்புவது – தொடர்பாக

**<u>பார்வை</u>**
1. தமிழ் நாடு தகவல் ஆணையத்திடமிருந்து பெறப்பட்ட குறிப்பாணை கடித எண். SA 3876/மா.த.த.ஆ/2017 நாள் 18.11.2017.
2. அரசுக் கடித எண். 13169/யு1/2017–1, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 18.12.2017.

– – – –

பார்வை 2–ல் காணும் அரசுக் கடிதம் மூலம் பெறப்பட்ட, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் குறிப்பாணை எண். SA 3876/மா.த.த.ஆ/2017 நாள் 18.11.2017–ன் நகல், தகவலின் பொருட்டு இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

இணைப்பு – மேலே உள்ளவாறு.

5.01.18

பொதுத் தகவல் அலவலர்,
தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005
இணை ஆணையர் (சட்டம்) (முகூபொ)

**நகல்**
1. இணை ஆணையர் (கணினி மையம்),
சென்னை – 600 006.

மேற்காணும் விவரத்தினை வணிக வரித்துறையின் இணையத்தள முகவரியில், RTI என்ற தலைப்பின் கீழ் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.)

2.கோப்பு / இருப்புக் கோப்பு

கூடுதல் தலைமைச் செயலர்/
ஆணையர் (வ.வ.)
28 டிச 2017
எழிலகம், சென்னை—600 005

வணிகவரி (ம) பதிவுத்(யு1)துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 9.

கடித எண்.13169/யு1/2017–1, நாள்: 18.12.2017

433

அனுப்புநர்
திரு.சி.சேகர், பி.எஸ்சி., எம்.ஏ., எம்.பில்.,
அரசு துணைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர் / மாநில வரி ஆணையர், சென்னை–5.(இணைப்புடன்)
பதிவுத்துறைத் தலைவர், சென்னை–28. (இணைப்புடன்)

ஐயா

பொருள்: தமிழ்நாடு தகவல் ஆணையம் – தகவல் ஆணையத்திலிருந்து பெறப்பட்ட குறிப்பாணை – தகவலுக்காக அனுப்புவது – தொடர்பாக.

பார்வை: தமிழ்நாடு தகவல் ஆணைய கடித எண்.SA 3876/மா.த.த.ஆ/2017, நாள் 18.11.2017.

******

பார்வையில் காணும் தமிழ்நாடு தகவல் ஆணைய குறிப்பாணையின் நகல் தகவலுக்காக தங்களுக்கு இணைத்தனுப்பப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு துணைச் செயலாளருக்காக.

நகல்
வணிகவரி மற்றும் பதிவுத்(அநமு) துறை,
சென்னை–9. (இணைப்புடன்)

தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2 தியாகராய சாலை, தேனாம்பேட்டை,
சென்னை 600 018. தொலைபேசி 24347590

கடித எண்.SA 3876/மா.த.த.ஆ/2017 நாள்:18.11.2017

## குறிப்பாணை

மனுதாரர் திரு P.தர்மராஜன் அவர்களின் மேல்முறையீட்டின் மீது கடந்த 13.09.2017 அன்று ஆணை வெளியிடப்பட்டது. பொதுத் தகவல் அலுவலரான திருமதி M.அழகம்மாள் என்பவர் தகவல் வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்திற்காக பிரிவு 20(1)/ 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான விளக்கத்தை சமர்ப்பிக்குமாறு ஆணையம் ஆணையிட்டது. அவ்வாணைக்கிணங்க, பொதுத் தகவல் அலுவலர், 10.10.2017 நாளிட்ட கடிதத்தின் மூலம் தனது விளக்கத்தை சமர்ப்பித்துள்ளார்.

2. ஆணையத்தின் ஆணை கிடைக்கப்பெறும் வரை மனுதாரர், குறிப்பாணை எண் 10/1/2013-IR, நாள் 06.10.2015 நகலைத்தான் கோருகிறார் என்பது விளங்கவில்லை. ஏராளமான மேற்கோள் காட்டுவதால், ஆவணத்தைத் தேடுவதில் சிக்கலை ஏற்படுத்துகிறது. மேலும் இடைக்காலத்தில் பல்வேறு தகவல்களை மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், தற்போது, மனுதாரரின் கோரிக்கையான 10/1/2013-IR, சான்றொப்பமிட்ட நகலும் மனுதாரருக்கு அனுப்பப் பட்டுள்ளது என்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கிறார்.

3. பிரிவு 2(f)-ல் சான்றொப்பமிட்ட நகல் எனக் கூறப்படவில்லை என்று பொதுத் தகவல் அலுவலர் கூறியுள்ளார். பிரிவு 2(த)-ல் "உறுதிச் சான்றளிக்கப்பட்ட படிகள்" என்பது கூறப்பட்டுள்ளது. மேலும், சான்றளிக்கப்பட்ட நகல் அளிக்க வேண்டும் என்ற சுற்றறிக்கை பற்றித் தனக்குத் தெரியாது என்பதும் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. இந்த உத்தரவு 41633 (AR 3/2015) நாள் 23.11.2015 என்ற கடிதத்தின் மூலம் அனைத்துத் துறைச் செயலாளர்களுக்கும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை செயலாளரால் அனுப்பப்பட்டுள்ளது.

4. ஆயினும் பொதுத் தகவல் அலுவலரின் மற்ற விளக்கங்களையும், வழக்கின் விவரங்களையும் கருத்தில் கொண்டு, அவருக்கு தண்டம் விதிக்கத் தேவையில்லை என்று ஆணையம் கருதுகிறது.

5. பத்தி 3-ல் குறிப்பிட்டவற்றைக் கருத்தில் கொண்டு, அனைத்து பொதுத் தகவல் அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கும்படி துறைச் செயலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

//ஆணைப்படி//

பதிவாளர்

பெறுநர்

திருமதி M.அழகம்மாள்,
உதவி ஆணையர் (ST), CEW-I,
இணை ஆணையர் அலுவலகம் (ST),
அமலாக்கப்பிரிவு-I(Enforecement-I),
சென்னை-600 006.

நகல்

செயலாளர்,
வணிகவரி மற்றும் பதிவுத்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-9.
PR/PS 20112017